## யூன் – 24 - சனி
### தூய திருமுழுக்கு யோவானின் பிறப்பு
### ஆண்டவரே! நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்!
### திபா. 139:1

### முதல் வாசகம் : ஏசாயா 49 : 1 – 6

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள் தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார். அவர் என்னிடம், ”நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்” என்றார். நானோ, ”வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன் ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது” என்றேன். யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார் ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல் அவர் இப்பொழுது உரைக்கிறார். அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல் :** வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால்
நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்

### இரண்டாம் வாசகம்: திருத்தூதர் பணி 13 : 22 – 26

சகோதர சகோதரிகளே! பின்பு கடவுள் அவரை நீக்கிவிட்டுத் தாவீதை அவர்களுக்கு அரசராக ஏற்படுத்தினார் அவரைக் குறித்து ”ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன் என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்” என்று சான்று பகர்ந்தார். தாம் அளித்த வாக்குறுதியின்படி கடவுள் அவருடைய வழிமரபிலிருந்தே இஸ்ரேலுக்கு இயேசு என்னும் மீட்பர் தோன்றச் செய்தார். அவருடைய வருகைக்கு முன்பே யோவான், ”மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள்” என்று இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பறைசாற்றி வந்தார். யோவான் தம் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை முடிக்கும் தறுவாயில் ”நான் யார் என நீங்கள் நினைக்கிறீர்களோ அவரல்ல நான். இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய மிதியடிகளை அவிழ்க்கவும் எனக்குத் தகுதியில்லை” என்று கூறினார். சகோதரரே, ஆபிரகாமின் வழிவந்த மக்களே, இங்கு இருப்போருள் கடவுளுக்கு அஞ்சி நடப்போரே, இந்த மீட்புச் செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது.

### நற்செய்தி : லூக்கா 1 : 57 – 66, 80

அக்காலத்தில் எலிசபெத்துக்குப் பேறுகாலம் நெருங்கியது. அவர் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆண்டவர் அவருக்குப் பெரிதும் இரக்கம் காட்டினார் என்பதைக் கேள்விப்பட்டுச் சுற்றி வாழ்ந்தோரும் உறவினரும் அவரோடு சேர்ந்து மகிழ்ந்தனர். எட்டாம் நாளில் அவர்கள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வந்தார்கள் செக்கரியா என்ற அதன் தந்தையின் பெயரையே அதற்குச் சூட்ட இருந்தார்கள். ஆனால் அதன் தாய் அவர்களைப் பார்த்து, ”வேண்டாம், அதற்கு யோவான் எனப் பெயரிட வேண்டும்” என்றார். அவர்கள் அவரிடம், ”உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே” என்று சொல்லி, ”குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?” என்று தந்தையை நோக்கிச் சைகை காட்டிக் கேட்டார்கள். அதற்கு அவர் எழுதுபலகை ஒன்றைக் கேட்டு வாங்கி, ”இக்குழந்தையின் பெயர் யோவான்” என்று எழுதினார். எல்லாரும் வியப்படைந்தனர். அப்பொழுதே அவரது வாய் திறந்தது. நா கட்டவிழ்ந்தது அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். சுற்றி வாழ்ந்தோர் அனைவரும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அஞ்சினர். இச்செய்தி யூதேய மலை நாடெங்கும் பரவியது. கேள்விப்பட்டவர்கள் யாவரும் இச்செய்தியைத் தங்கள் உள்ளங்களில் இருத்தி, ”இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?” என்று சொல்லிக் கொண்டார்கள். ஏனெனில் அக்குழந்தை ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றிருந்தது. குழந்தையாயிருந்த யோவான் வளர்ந்து மனவலிமை பெற்றார். இஸ்ரயேல் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை அவர் பாலை நிலத்தில் வாழ்ந்து வந்தார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நாம் எவ்வாறு இறைவனோடு இணைந்திருக்க வேண்டும் என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றது. இறைவனோடு இணைந்திருக்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சியை இந்த உலகில் எதனோடும் ஒப்பிட முடியாது. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு திருமுழுக்கு யோவான் தன் பிறப்பு முதல் இறப்பு வரை இறைவனோடு இணைந்திருந்தார். எவ்வளவு சவால்களை சந்தித்தாலும் துணிவோடு சந்தித்தார் இறைவனோடு இணைந்திருந்தார். கொடி திராட்சை செடியோடு இணைந்திருந்தாலன்றி தானாக கனி தரமுடியாது என்று இயேசு கூறுகின்றார். இதனுடைய பொருள் நம்முடைய பலத்தில் அல்ல, மாறாக இறைவனில் நம்பிக்கை வைக்கவேண்டும், அவரோடு இணைந்திருக்க வேண்டும். இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கையில் நாம் இதைப் பார்க்கின்றோம். ஒரு காலத்தில் நாடோடிகளாக நாடே இல்லாதவர்களாக பலவீனர்களாக இருந்த இஸ்ராயேல் மக்களுக்கு பலமாக இருந்தது யாவே இறைவன். இறைவனோடு அவர்கள் இணைந்திருந்தார்கள். அவர்களுக்கு என்று ஒரு நாட்டைப் பெற்றார்கள். ஆனால் தங்களுடைய பலத்தில் நம்பிக்கை வைத்து கடவுளை விட்டு விலகிச் சென்றார்களோ, அன்றே அவர்கள் நாட்டை இழந்தார்கள். அடிமைகளாக்கப்பட்டார்கள். ஆனால் யோவான் இறைனோடு இணைந்திருந்தார் துயரங்களை துணிவோடு சந்தித்தார். அதற்கு தேவையான ஆற்றலை கடவுள் அவருக்கு கொடுத்தார். நாமும் கடவுளோடு இணைந்திருந்தால் வாழ்வை துணிவோடு எதிர்கொள்ள முடியும் ஆமென்.